ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2122/56 - 2019 මැයි මස 10 වැනි සිකුරාදා - 2019.05.10
*2122/56 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

வடமாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில், வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில், இல.ஜே/229, துர்க்காபுரம் கிராம அலுவலர் பிரிவில், தெல்லிப்பளை கிழக்கு கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2018.06.30 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற்சுவட்டு வரைபடத்தில் இல. வைஏ/ரீஎல்எல்/2018/41 இல் குறிப்பிடப்பட்ட துண்டு 'ஏ' எனக் குறிப்பிடப்பட்டுள்ள சுமார் 0.0497 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டின் எல்லைகள் :

*01.* **துண்டு 'ஏ' – தோதரை – விஸ்தீரணம்: 0.0497 ஹெக்டயார்**

வடக்கு: தோதரை வளவுத் தோட்டம், வேலுப்பிள்ளை சௌந்தர ராஜனின் ஆதனம் ; கிழக்கு : தோதரை வளவுத் தோட்டம், கே. கணேச மூர்த்தி சர்மாவின் ஆதனம் மற்றும் ஏனையோரின் ஆதனம் ; தெற்கு : வீதி (பிரதேச சபை) ; மேற்கு: தோதரை வளவுத் தோட்டம், கே. கணேச மூர்த்தி சர்மாவின் ஆதனம் மற்றும் ஏனையோரின் ஆதனம் .

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

குறிப்பு இல. : 4-3/5/2018/எச்ஏ/16.
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர", ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019.04.11.

05-684